**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**S.C No. 16 /2019**

2022–ம் வருடம் ஜுன் மாதம் 14–ம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணன் (அ.சா.–4) | தொழில் | : |
| த/பெ., க/பெ. | : | வயது | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | நாள் | : 14.07.2022 |
| மாவட்டம் | : | | |

முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)

நான் பழனி, குபேரபட்டிணத்தில் குடியிருந்து வருகிறேன். பார்வை மகஜரில் காட்டப்படும் முதலாவது கையெழுத்து என்னுடையது தான் . எனக்கு தேதி ஞாபகம் இல்லை . அப்துல்கலாம் மளிகை கடை முன்பு வைத்து அங்கு ஒரு குற்ற வழக்கு சம்மந்தமாக சண்டை என்று கூறினார்கள். அது சம்மந்தமாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் . போலீசார் என்னை விசாரித்தார்கள். பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ–2.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த 8.1.2016–ம் தேதி காலை 9 மணிக்கு நானும் கருப்பணன் மகன் தங்கராஜ் என்வரும் சின்னையா தெருவில் அப்துல்சலாம் மளிகைக்கடை அருகில் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த பழனி , நகர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற எண் 659/2016 U/s.307, 294 (b) இதச வழக்கில் சம்பவ இடத்தை சுட்டிக் காட்டியும் அங்கிருந்த எங்கள் இருவர் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார்கள்என்றும் அதில் நான் சாட்சி கையெழுத்து இட்டேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2022.07.14 16:52:30 +0530

கூடுதல் சார்பு நீதிமன்றம்,
பழனி.